DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 127/2023

List of Witness : Lw4

Prosecution Witness : PW4

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | செல்வக்குமார் | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | பிச்சை | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 22/08/2024

(எதிரி ஆஜர்கள்)

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் தேவசின்னாப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் டெம்போ டிரைவராக வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். சந்தானபாரதிக்கு எனது அண்ணன் மகள் நந்தினியை திருமணம் செய்து வைத்ததன் மூலம் அவர்களை எனக்கு தெரியும். 2018ம் வருடம் நந்தினியை சந்தானபாரதிக்கு திருமணம் செய்து வைத்தோம். 2019ம் வருடம் நந்தினிக்கு வளைகாப்பு போடுவதற்காக சந்தானபாரதியின் தோட்டத்திற்கு சென்றுபேசுவதற்காக நானும் எனது மனைவி கௌதமியும் எனது அண்ணன் மூர்த்தியும் அண்ணன் மனைவி சரஸ்வதியும் சென்று பேசுவதற்காக சென்றோம். எதிரிகள் வளைகாப்பு எல்லாம் போடக்கூடாது என்று சொன்னார்கள். சந்தானபாரதி வெளிநாட்டிற்கு வேலைக்கு சென்றுவிட்டு ஒன்று ஒன்றரை மாதத்தில் திரும்பி வந்துவிட்டார். மறுபடியும் வேலைக்கு செல்லவில்லையா என்று கேட்டதற்கு பணம் 25 லட்சம் ரூபாயை எனது அண்ணன் கொடுத்ததால் தான் நான் வேலைக்கு செல்வேன்என்று சந்தானபாரதி கூறிவிட்டார். பிள்ளைய அப்போது தான் வாழவிடுவேன் என்று கூறிவிட்டார். சந்தானபாரதியின் அத்தை அமுதவள்ளி சந்தானபாரதியின் அப்பா மற்றும் அவரது சித்தி, சந்தானபாரதி அனைவரும் சேர்ந்து பிள்ளைய வாழவிடமாட்டோம் என்று கூறினார்கள். இது புருஷன் பொண்டாட்டி சண்டை என்றும் எப்படியும் சேர்ந்துவிடுவார்கள் என்றும் நாங்கள் விட்டுவிட்டோம்.சந்தானபாரதி டைவஸ் கேட்டு வக்கீல் நோட்டீஸ் அனுப்பினார். அப்போது தான் எங்களுக்கும் தெரியும். பிறகு காவல்நிலையம் சென்று சம்பவம் தொடர்பாக புகார் அளித்தோம். போலீசார் என்னை

விசாரணை செய்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

நந்தினியின் அப்பா என்னுடைய நேரடி உறவு முறை இல்லை. அவரது அப்பா நேரடி முறை இல்லை என்பதை நான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. எனக்கு இவ்வழக்கில் பாரதி என்ற எதிரியை தவிர வேறு எதிரிகள் தெரியாது என்று சொன்னால் சரியல்ல. அமுதவள்ளி என்பவரை தெரியும். எந்த தேதியில் திருமணம் நடைபெற்றது என்று எனக்கு தெரியாது. 2018 ம் ஆண்டில் திருமணம் நடைபெற்றது. எந்த தேதியில் வளைகாப்பு நடைபெற்றது என்று எனக்கு தெரியாது. ஆறு மாதம் கழித்து 2019 ல் வளைகாப்பு நடைபெற்றது. புருனே நாட்டில் இருந்து வேலை பார்த்துவிட்டு ஒரு மாதம் கழித்து வந்தபின்பு 25 லட்சம் கொடுத்தால்தான் வெளிநாட்டில் வேலை செய்யும் முடியும் என்று பாரதி கேட்டதாக எனக்கு தகவல் தெரியும் என்றால் சரிதான். மேற்படி சங்கதிகளை நான் போலீசார் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேன். நந்தினிக்கு செய்யப்பட்ட சீர்வரிசைகள், நகைகள் யாரிடம் உள்ளது என்று எனக்கு தெரியும். எனது அண்ணனிடம் திருப்பிக்கொடுத்துவிட்டார்கள். இந்த வழக்கை தாக்கல் செய்த பிறகு தான் போலீசார் வாங்கிக்கொடுத்தார்கள். போலீசார் வாங்கிக்கொடுத்தார்கள் என்ற விவரத்தை நான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். வழக்கு சம்பவம் எந்த தேதியில்நடந்தது என்றால் ஆறு மாதங்களுக்கு முன்பு நடந்தது. நகைகள் எதிரிகளிடம் இருந்ததால் போலீசாரிடம் புகார் கொடுத்தோம். விவாகரத்து அறிவிப்பு கொடுத்த பின்பு தான் போலீசில் புகார் கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். அதற்கு முன்பு எந்த வழக்கு சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரிதான். வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்ததற்கு பின்பு புகார்தாரர் வேறு எந்த புகாரும் கொடுத்துள்ளாரா என்றால் திண்டுக்கல் சமரச கோர்ட்டில் மனு கொடுத்துள்ளார். திண்டுக்கல் DSP அலுவலகத்திலும் மைசூர் குடும்பநல நீதிமன்றத்திலும், இந்நீதிமன்றத்தில் தனிபுகாரும் கொடுத்த விவரம் எனக்கு தெரியாது. அ.சா.1 நந்தினிக்கு நான்நேரடி உறவு முறை இல்லை என்று சொன்னாலும் வழக்கு சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது

என்றால் சரியல்ல. எனக்கு வழக்கு சம்பவம் குறித்து எதுவும் தெரியவில்லை என்பதால் தான் என்னால் எதிரிகளின் பெயரை கூட சாட்சியம் அளிக்க முடியவில்லை என்றால் சரியல்ல.எனக்கு வழக்கு சம்பவத்தை பற்றி எதுவும் தெரியாது என்றாலும் அ.சா.1 கேட்டுக்கொண்டதன் பேரில் பொய் சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

P K DHAMAYANTHI
Digitally signed by P K DHAMAYANTHI
Date: 2024.08.22 17:35:09 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 22/08/2024